மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆலைகளையும் அரசு ஏற்று நடத்துவது என்பது இயலாத ஒரு காரியம். அரசு உத்தரவு களை ஏற்றுக்கொள்ளாத ஆலைகள்மீது அந்த உத்தரவு களை அமல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின்கீழ் 1993-94 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப் பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு விற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS